1982 மார்ச் 25]

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) ஒலிப் பெருக்கிகளைப் பாதுகாப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவை முடிவதற்குள்ளாக ஒரு சிறு அறிவிப்பை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவையில் அமைச்சர்களுக்கு வைத்திருப்பது போன்று ஒலிபெருக்கிகள் எல்லா உறுப்பினர்களுக்கும் வேண்டும் என்று கேட்டு ஒரு ஒலி பெருக்கி கிட்டத்தட்ட 800, 900 ரூபாய் விலையிலே வாங்கப் பெற்று எல்லா உறுப்பினர்களுக்கும் வைக்கப்பட்டு இருக்கிறது. அந்த ஒலிபெருக்கியை மேலும் கீழும் வளைத்து ஒரு ஒலிபெருக்கி உடைந்து போயிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். எப்படிப்பட்ட உணர்ச்சி வந்தாலும் ஒலிபெருக்கிகளை ஒன்றும் செய்யாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று,—நாளை விடுமுறை, பேரவைக் கூட்டம் இல்லை—நாளை மறுநாள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் தேதி காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

149. சென்னை மாநகர், நந்தனம் நகர்ப் பகுதிக்குரிய விரிவான மேம்பாட்டுத் திட்டத்தையும் அதன் அனைத்து இணைப்புகளையும் பொதுமக்கள் பார்வையிடுதல் குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 17—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1362 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

150. சென்னை மாநகர், மயிலாப்பூர் சாந்தோம் பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்தையும் அதன் அனைத்து இணைப்புகளையும் பொதுமக்கள் பார்வையிடுதல் குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 27—10—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1423 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது.]